### தெசலோனிக்கேயர் 1 5:16-18

எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். இடைவிடாமல் ஷெஜபம் பண்ணுங்கள். (சர்வப். 18:22; கொலோ. 4:2.) சகலத்திலும் நன்றியறிந்த ஸ்தோத்திரஞ் செய்யுங்கள். ஏனெனில் சேசுக்கிறீஸ்துநாதருக்குள்ளே உங்க ளெல்லாரையும்பற்றிய தேவசித்தம் இதுவே.

### பிலிப்பியர் 4:6-7

எதன்பேரிலும் கவலைப்படாதிருங்கள். ஆனால் எல்லா ஷெஜபத்திலும், வேண்டுதலிலும், நன்றியறிந்த ஸ்தோத் திரத்தோடுகூடிய உங்கள் மன்றாட்டுகள் தேவசமுகத்தில் தெரியவரக்கடவது. அப்படியே எல்லா அறிவை யுங் கடந்த சர்வேசுரனுடைய சமா தானமானது உங்கள் இருதயங்களை யும் உங்கள் சிந்தைகளையும் சேசுக் கிறீஸ்துவுக்குள் காப்பாற்றுவதாக.

### கொரிந்தியர் 1 15:57

நம்முடைய ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதரைக் கொண்டு நமக்கு ஷெஜயந்தந்தருளின சர்வேசுரனுக்குத் தோத்திரம். (1 அரு. 5:5.)

### தெசலோனிக்கேயர் 2 1:3

சகோதரரே, உங்கள் விசுவாசம் அதிகமதிகமாய் ஓங்கி வளருகிறதினாலும், உங்களில் ஒவ்வொருவருக்கும் உள்ள அன்னியோன்னிய சிநேகம் பெருகிவருகிறதினாலும் நியாயத்தின் படியே நாங்கள் உங்களுக்காக எப்போதும் சர்வேசுரனுக்கு நன்றி யறிந்த ஸ்தோத்திரஞ் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

### நாளாகமம் 1 16:34

ஆண்டவரைத் துதியுங்கள்; அவர் நல்லவர்; அவருடைய கிருபை சதாகாலத்துள்ளது.

### உரோமாபுரியார் 1 11:36

சகலமும் அவராலும், அவரைக் கொண்டும், அவரிலும் உண்டாயிருக்கின்றது. அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்.

கொலோசியர் 3:15

கிறீஸ்துநாதருடைய சமாதானம் உங்கள் இருதயங்களில் சந்தோஷ அக்களிப்புக்கொள்ளட்டும். இதற்கா கவே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப் பட்டிருக்கிறீர்கள். இதற்காக நன்றியறிந் திருங்கள்.

கொலோசியர் 3:17

வார்த்தையினாலாவது கிரியையினாலாவது நீங்கள் எதைதைச் செய்தாலும், அவையெல்லாம் ஆண்டவரா கிய சேசுக்கிறீஸ்துவின் நாமத்தினாலே செய்து, அவர் மூலமாய்ப் பிதாவாகிய சர்வேசுரனுக்கு நன்றியறிந்த ஸ்தோத் திரம் பண்ணுங்கள். (1 கொரி. 10:31.)

கொலோசியர் 4:2

ஷெஜபத்தில் நிலைத்திருங்கள். நன்றியறிந்த ஸ்தோத்திரத்தோடு ஷெஜபத்தில் விழித்திருங்கள். (லூக்.18:1; 1 தெச. 5:17.)

சங்கீதங்கள் 9:1

ஆண்டவரே, என் முழு இருத யத்தோடு நான் உம்மைத் துதிப் பேன்; உமது அதிசயங்களையெல் லாம் விபரித்துக் கூறுவேன்.

காட்சியாகமம் 5:13

அப்போது வானத்திலும், பூமி யிலும், பூமியின் கீழும் உள்ள சகல சிருஷ்டிகளும், சமுத்திரத்திலும் அதி லடங்கிலும் உள்ளவைகளுமாகிய யாவும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக் கும், செம்மறிப்புருவையானவருக்கும் ஸ்தோத்திரமும், வணக்கமும், மகிமை யும், வல்லபமும், காலாகாலங்களுக்கும் உண்டாவதாக என்று சொல்லக் கேட் டேன்.

கொலோசியர் 3:16

கிறீஸ்துநாதருடைய வாக்கியம் உங்களிடத்தில் சம்பூரணமாய்ச் சகல ஞானத்தோடுங் குடிகொண்டிருக்கக்கடவது. அப்படியே நீங்கள் ஒருவரொருவருக்குப் போதித்து, புத்தி சொல்லி, சங்கீதங்களிலும், கீர்த்தனைகளிலும், ஞானப்பாட்டுகளிலும் சர்வே சுரனுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரங் களை உங்கள் இருதயங்களில் பாடிக் கொண்டுவாருங்கள்.

கொரிந்தியர் 2 9:11

இந்தப்பிரகாரமாய் நீங்கள் சகலத்திலும் நிறைந்தவர்களாகி, எங்களாலே சர்வேசுரனுக்குத் தோத்திரமுண்டாவதற்கு ஏதுவாகச் சகல நேர்மையான தர்மத்திலும் பெருகி வளருவீர்கள்.

யோனாஸ் ஆகமம் 2:9

வீணிலே திரணமாகிய (சிலை களைச்) சேவிப்போர், தயை(யின் ஊற்றைக் கைவிடுகின்றனர்.